வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 28.07.2025 திங்கட்கிழமை இதழ் : 208 பக்கங்கள் : 12

# ஒற்றுமையை ஐ. நா.வுக்கு வெளிப்படுத்த தமிழ் அரசு கட்சியும் பங்களிக்கவேண்டும்

## கஜேந்திரகுமார் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

**ஐக்கிய நாடுகள் சபைக்கு எமது ஒற்றுமையான நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும். அது தமிழ் அரசுக் கட்சியின் பங்களிப்போடு நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்தவேண்டும். அதற்கான முடிவை இலங்கை தமிழ் அரசுக் கட்சி விரைவில் எடுக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

கறுப்பு ஜூலை நினைவுக் கருத்தரங்கு 'நேற்று - இன்று- நாளை' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி முதல் ஒரு வார காலம் இலங்கையில் இடம்பெற்ற படுகொலைத் தாக்குதல்களில் பலியான உறவுகளின் நினைவாக குறித்த கருத்தரங்கு இடம்பெற்றது.



இதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஓரங்கட்ட வேண்டுமென்பது எமது நோக்கமல்ல. அவர்களுக்கு எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

அந்த வகையில் அது தமிழ் மக்களின் அதிகமான பிரதிநிதிகளைக் கொண்டதொரு கட்சியாகவே உள்ளது. அவர்களே பொறுப்புக்கூறல்

11

## வரி குறைப்பு: அடுத்த வாரம் முக்கிய பேச்சு

கொழும்பு, ஜூலை 28

இலங்கையின் ஏற்றுமதி பொருட்களுக்கு அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரியை குறைத்துக்கொள்வது தொடர்பான மற்றொரு கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலக அதிகாரிகளுக்கு இடையே இந்த கலந்துரையாடல் மெய்நிகர் வழியில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும்

11

அரியாலை மனித புதைகுழி:

## தரையை ஊடுருவும் ராடர் ஸ்கான் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 28

அரியாலை பகுதியில் அமைந்துள்ள மனிதப் புதைகுழியில் தற்போது தரையை ஊடுருவும் ராடர் மூலம் பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான தொழில்நுட்பம் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு, துரிதகதியில் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக, செய்மதிப் படங்களின் அடிப்படையில் அகழ்வுப் பணிகளுக்கு வெளியே புதிய இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை, துறைசார் நிபுணரான சோமதேவாவினால் உறுதிப்படுத்தப்பட்ட பகுதிகளாகும்.

11

## எலும்புக்கூட்டு தொகுதிகள் எதுவும் நேற்று கண்டுபிடிக்கப்படவில்லை!



யாழ்ப்பாணம், ஜூலை 28

அரியாலை மனிதப் புதைகுழிகளில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை எவ்வித எலும்பு கூட்டுத் தொகுதிகளும் அடையாளம் காணப்படவில்லை.

அரியாலை பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இல - 02" என நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் பகுதி அகழ்வுப் பணிகள் நேற்று 22ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது இரண்டு மனிதப் புதைகுழிகளில்

11

## கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு நெல்லியடியில் தீப்பந்த போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூலை 28

கறுப்பு ஜூலை நினைவேந்தலை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 07 மணியளவில் நெல்லியடி மத்திய பேருந்து நிலையம் முன்பாக தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் கட்சியின் பதில் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் , கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## சட்டவாக்க கட்டமைப்புகள் பலப்படுத்தப்படவேண்டும்!

### ஐரோப்பிய ஒன்றிய தூதர் இலங்கையிடம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 28

சிறுவர்களுக்கான நீதியில் நேர்மையும் சமத்துவமும் பிரதிபலிக்கவேண்டும் என்றும், சட்டவாக்கக் கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு பலப்படுத்த வேண்டுமெனவும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதர் கார்மென் மொரெனோ

11

## முன்னாள் அமைச்சர் மிகவிரைவில் கைது?

கொழும்பு, ஜூலை 28

கடந்த அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர் ஒருவரை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

500 கோடி ரூபாவுக்கும் அதிகமான

11

## ஜனாதிபதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்

### அமைச்சர் லால் காந்த வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பாதுகாப்பு தொடரணி பலப்படுத்தப்படவேண்டும் என்று தாம் நம்புவதாக விவசாய அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

பயணத்திற்கு தாமே இரட்டை ரக்ஸியைப் பயன்படுத்தினாலும், செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்கள் உட்பட தனது அமைச்சின் மூத்த அதிகாரிகள் சொகுசு வி 8 வாகனங்களைப் பயன்படுத்துவதாக அவர் கூறினார்.

11

## மாகாண சபை தேவையா? சிந்திக்கவேண்டிய காலம்

### சுட்டிக்காட்டுகிறார் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 28

மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியமா என்பதை மீள் சிந்திக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. மாகாண சபை முறைமையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது அப்படியே முடித்துக்கொள்வதா? அல்லது அதனை முழுமையாக மறுசீரமைப்பு செய்வதா என்பது தொடர்பில் நாடளாவிய ரீதியில் கலந்துரையாடல்களும் மீளாய்வும் இடம்பெறவேண்டியது அவசியம் என்று முன்னாள் பிரதமரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவரத்தன தெரிவித்தார்.

11

## அல்லைப்பிட்டியில் வயோதிபர் எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

அல்லைப்பிட்டி பகுதியில் படுக்கையிலேயே எரிந்த நிலையில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

3ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டி வெண்புறவியைச் சேர்ந்த 84 வயதுடைய மணியாஸ் சேவியர் என்ற வயோதிபரே இவ்வாறு எரிந்த நிலையில் நேற்று முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வயோதிபர் வாழ்ந்த வீட்டில் இருந்து புகை வெளிவருவதை வீதியால் சென்ற அவரது உறவினர் அவதானித்து வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது குறித்த விபரீதத்தை கண்டுள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் முறையற்ற கழிவகற்றல் உயிர் பல்வகைமைக்கு ஆபத்து!

## விலங்கியல் பேராசிரியர் கணபதி கஜபதி

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணத்தில் முறையற்ற கழிவு முகாமைத்துவம் சூழல் தொகுதியின் உயிர் பல்வகைமைக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் கணபதி கஜபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலம்பெயர் பறவைகளான வலசைப் பறவைகள் அரிதாகக் காணப்படுகின்ற சரசாலை, குருவிக்காடு, நாகர்கோவில் பகுதி மற்றும் அரியாலைப் பகுதி முறையற்ற கழிவகற்றல் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதிகளாக காணப்படுகின்றன.

நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கை தர அதிகரிப்பு மற்றும் குடித் தொகை அதிகரிப்பு கழிவகற்றல் செயற்பாட்டுக்கு சவாலாக இருக்கின்ற நிலையில் அதற்கேற்ற முறையான கழிவகற்றல் பொறிமுறை இன்னும் உருவாக்கப்படவில்லை.

மாவட்டத்தைப் பொறுத்தவரை வீதிகளில் கழிவுகள் வீசப்படுகின்றன- எரியூட்டப்படுகின்றன. இவை அனைத்தும் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும்.

முறையற்ற கழிவகற்றலினால் சமூகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றன.

சரசாலை, நாகர்கோவில் மற்றும் அரியாலை பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்ட- பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாக காணப்படுகின்ற நிலையிலும் அங்கு உக்க முடியாத கழிவுகள் தொடர்ந்து கொட்டப்படுகின்றன.

கடற்கரை ஓரமாக மற்றும் அடர்ந்த பற்றைகள் உள்ள பிரதேசங்களில் இவ்வாறு கழிவுகள கொட்டப் படும்போது அவற்றை விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுக்காக தேடிச் செல்கின்றன.

அவற்றை உண்ணும் போதும் விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுத் தொகுதிக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய கழிவுகள் கொட்டப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் நெடுந்தீவு பிரதேசத்தில் குதிரைகள் இறந்து கிடந்தபோது அவற்றை ஆய்வு செய்தபோது அவற்றின் வயிற்றுக்குள் பொலித்தீன் பைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சூழலைப் பற்றிய அறிவு இல்லாமல் கழிவகற்றல் செயல்பாடுகளில் ஈடுபடும் போது மனிதனுக்கு மட்டுமல்ல சூழலில் வாழுகின்ற உயிரினங்களுக்கும் அது ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும்.

ஒரு சூழல் வாழ்கின்ற மனிதன் மற்றும் உயிரிகளின் இயல்பான வாழ்க்கைக்கு முறையான கழிவகற்றல் பொறிமுறை செயல்படுத்தப் படவேண்டும். அல்லாவிட்டால் சூழலில் வாழ்கின்ற ஒரு அங்கி அல்லது ஒரு அங்கம் பாதிக்கப்படுமானால் அது ஒட்டுமொத்த சூழலையும் பாதிக்கும்-என்றார். (அ-05)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஜூலை 28
வவுனியா - பரசங்குளத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.
திருகோணமலையில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் பரசங்குளம் பகுதியில் நிலைதடுமாறி மின்சார கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் கிளிநொச்சி - பாரதிபுரத்தை சேர்ந்த 23 வயதான ஜெயசீலன் திவாகரன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ -10)

# வவுனியா லயன்ஸ் கழகத்தால் பல்வேறு நலத்திட்ட உதவிகள்

வவுனியா, ஜூலை 28
வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தால் பல்வேறு நலத்திட்ட உதவிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டதுடன் வட மாகாணத்தின் புதிய லயன்ஸ் கழகங்களின் ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட கே. எம். பத்மநாதனை வரவேற்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

வவுனியா கந்தசுவாமி ஆலய வளாகத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

இலவச கண்பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்கல், வறிய குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு புத்தகபைகள் வழங்கல், சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்குபற்றச்செல்லும் வீராங்கனைகளுக்கு உதவித் தொகை போன்றன வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் கே.செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநராக பதவியேற்ற கே.எம்.பத்மநாதன் மற்றும் அவரது துணைவியார் லயன் பத்மாதேவி ஆகியோர் கலந்துகொண்டதுடன், லயன்ஸ் கழகத்தின் முக்கியஸ்தர்கள், அங்கத்தவர்கள் கலந்து சிறப்பித்தனர். (அ - 10)

# மயிலிட்டி திருப்பூர் பேச்சியம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று

யாழ்ப்பாணம், ஜூலை 28
மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

நேற்று காலை 6:30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி, பேச்சியம்பாள் 8:00 மணியளவில் தேரேறினார். தேர் பவனியைத் தொடர்ந்து தூக்குக் காவடி, தீச்சட்டி ஏந்தி பக்தர்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, 2021ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது கோவில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டது. மயிலிட்டி வாழ் மக்கள் மற்றும் மயிலிட்டி புலம்பெயர் உறவுகளின் விடா முயற்சியால் மயிலிட்டி திருப்பூர் பேச்சியம்மன் கோவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கோபுரமும் சிறப்பாக அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

2021ஆம் ஆண்டு கும்பாபிசேகம் இடம்பெற்று தொடர்ந்து வருடம் தோறும் திருவிழா இடம்பெற்று வருகிறது. (அ-05)

# வான் விபத்தில் இருவர் பலி

மத்தளவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வான் விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர். 4 பேர் படுகாயமடைந்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அங்குணகொலபெலஸ்ஸ வில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. எதிரே வந்த வாகனம் ஒன்றுடன் மோதிய வான் பின்னர் வீதியின் தடுப்புச் சுவருடன் மோதுண்டது.

இந்த விபத்தில் 72, 44 வயதான இரு பெண்கள் உயிரிழந்தனர். காயமடைந்த நால்வரும் அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக் குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மாவை சேனாதிராஜாவின் 6ஆம் மாத நினைவஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூலை 28
இலங்கை தமிழரசுக் கட்சியின் மறைந்த முன்னாள் தலைவர் மாவை சேனேதிராஜாவின் ஆறாவது மாத நினைவஞ்சலி நிகழ்வு நேற்று சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நற்பணி மன்றமும் வட்டுக்கோட்டை பகுதி மக்களும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி செலுத்தப்பட்டது. பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. பின்னர் குடும்பத்தினருக்கான நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மறைந்த மாவை சேனாதிராஜாவின் புதல்வன் மா.கலையமுதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபா குகதாஸ், பா.கஜதீபன், யாழ். மாநகர சபையின் உறுப்பினர் தர்ஷானந், தந்தை செல்வாவின் பேரன் இளங்கோவன், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி ஐ. நாகரஞ்சினி, யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், தந்தை செல்வா நற்பணி மன்றத்தினர், போராளிகள் நலன்புரி சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

# கிளிநொச்சி புளியம்பொக்கணையில் நேற்று 15 வருடங்களின் பின் மாட்டு வண்டில் சவாரி

கிளிநொச்சி, ஜூலை 28
கிளிநொச்சி புளியம்பொக்கணை சவாரித்திடலில் மாட்டு வண்டில் சவாரி நேற்று இடம்பெற்றது.

தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டில் சவாரி விளங்குகின்றது.

அந்த வகையில் இப்போட்டி யுத்தத்துக்கு பின்னர் இடம்பெறவில்லை.

இந்நிலையில் புளியம்பொக்கணை சவாரித் திடல் பதினைந்து வருடங்களின் பின்பு புனரமைக்கப்பட்ட நிலையில் நேற்று போட்டி இடம்பெற்றது.



இப்போட்டியில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த 130 இற்கு மேற்பட்ட காளைகள் போட்டியிட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
28.07.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் தரப்புகளால் முடியுமா?

ஒன்றை எதிர்ப்பது மிகவும் இலகுவானது. அதற்கு எவரும் கடினமாக உழைக்க வேண்டிதில்லை. சாய்வு நாற்காலியில் இருந்தவாறு அறிக்கையொன்றை வெளியிட்டுவிட்டு அமைதியாக இருக்கலாம். ஆனால், ஒன்றை அடைவதற்கு கடினமான உழைப்பு அவசியம். அர்ப்பணிப்பு அவசியம். பிரதமர் ஹரிணி அமரசூரிய, புதிய அரசியல் யாப்பு தொடர்பான விடயங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அதற்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

புதிய அரசியல் யாப்பு முயற்சி வெற்றியளிக்கலாம் அல்லது தோல்வியடையலாம் – அல்லது, அந்த முயற்சிகள் இடைநடுவில் கைவிடப்படலாம். அது விடயமல்ல. ஆனால், ஒருவேளை அது வெற்றிபெற்றுவிட்டது என்றே வைத்துக் கொண்டால், அந்தப் புதிய அரசியல் யாப்பின் மூலம், தமிழ் மக்களின் அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும் வல்லமை தமிழ் கட்சிகளிடம் இருகின்றதா?

இன்று அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை பற்றிப் பேசுபவர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கப் பார்க்கின்றனர் என்று கூச்சலிடுபவர்கள் இருக்கின்றனர். அவ்வாறானவர்களிடம் ஒற்றையாட்சியை நீக்கி, பதின்மூன்றையும் தாண்டிச் செல்லும் வல்லமை இருக்கின்றதா? இன்றைய சூழலில் கொழும்பை இறங்கிவரச் செய்வதற்கான ஏதாவது துருப்புச்சீட்டு தமிழர் பக்கத்திலிருக்கின்றதா? இருந்திருந்தால் கடந்த பதினாறு வருடங்களில், அந்த ஆற்றல் வெளிப்பட்டல்லவா இருந்திருக்க வேண்டும். இன்றும் சர்வதேசமே என்று அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருப்பதை தவிர, தமிழ் கட்சிகளால் வேறு எதனைச் செய்ய முடிந்திருக்கின்றது?

ஒருவேளை தேசிய மக்கள் சக்தி கூறும் புதிய அரசியல் யாப்பு வெற்றியளிக்குமாக இருந்தால், அதன் பின்னர் இலங்கையின் அரசியலில் பதின்மூன்று என்று ஒன்றில்லை. இந்த நிலையில், பதின்மூன்றாவது திருத்தச்சட்டமே தமிழர்களுக்கு அதிகம் என்று வாதிட முற்படும் தென்னிலங்கை அரசியல் சூழலில், அதனை கேள்விக்கு உள்ளாக்கி, மேலும், அதிகமான அதிகாரங்களை வழங்கக்கூடிய ஏற்பாட்டை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசமைப்பில் உறுதிப்படுத்துமா? அதனை நிர்ப்பந்திக்க தமிழர் தரப்பால் முடியுமா? அவ்வாறாயின் என்ன நடக்கும்? இருப்பதையும் குறைப்பதற்கான ஏற்பாடுகள்தான் புதிய அரசியல் யாப்பு என்னும் பெயரில் இடம்பெறும்.

அடிப்படையில் புதிய அரசியல் யாப்பு என்பதே தமிழர்களுக்கு எதிரானதுதான். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் இந்த விடயத்தை புரிந்து கொண்டு செயல்படும் ஆற்றலுடன் சம்பந்தன் - சுமந்திரன் தரப்பு இருந்திருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் அரசமைப்பில் இருப்பவற்றை அமுலாக்கும் விடயத்தில் முன்னோக்கிப் பயணிக்க முடியாமல் போனது. உண்மையில், புதிய அரசியல் யாப்புக்கு முன்னர், தமிழ் மக்களுக்கான தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சு இடம்பெற வேண்டும். அதில், உடன்பாடு எட்டப்பட வேண்டும் – அதன் பின்னர்தான் புதிய அரசியல் யாப்பு விடயத்தை கருத்தில் கொள்வதா அல்லது இல்லையா என்று தீர்மானிக்க வேண்டும். அப்போதுதான் தமிழர் தரப்பு புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் விடயத்தில் சம தரப்பாக இருக்க முடியும். இல்லாவிட்டால், புதிய அரசியல் யாப்பு என்னும் பெயரில் இருப்பதும் இல்லாமல் போய்விடும். இது நிச்சயம் நடக்கும்.

# 13 வேண்டாம் என்போர் அதனைவிட அதிகாரம் உள்ள அரசமைப்பை தருவோம் என்று உறுதியளிப்பார்களா?

## மூத்த பத்திரிகையாளர் தனபாலசிங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 28

13 ஐ வேண்டாம் எனக் கூறும் தமிழ்க் கட்சிகள் 13-ஐ விட அதிகாரம் உள்ள ஒரு அரசியல் அமைப்பை தமிழ் மக்களுக்கு கொண்டு வருவோம் என மக்களுக்கு உறுதி வழங்க முடியுமா என்று மூத்த பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தந்தை செல்வா நினைவரங்கில் இடம்பெற்ற ரெலோ அமைப்பின தமிழ்த் தேசிய வீரர்கள் தின நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் தேசிய அரசியலில் பயணிக்கின்ற தமிழ்க் கட்சிகளிடத்து நிலையான ஒரு கூட்டு இல்லாமை மக்களின் எதிர்கால அரசியலை முன்னெடுப்பதில் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக 13 ஐ நடைமுறைப்படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கைகளை முன்வைத்து வரும் நிலையில் சிலர் 13 ஐ வேண்டாம் எனக் கூறுகின்றார்கள்.

நான் அரசியல் கட்சி சார்ந்தவன் அல்லன். நான் ஒரு ஊடகவியலாளர். பதின்மூன்றை வேண்டாம் எனக் கூறுபவர்கள் பதின்மூன்றில் உள்ள அதிகாரங்களைவிட கூடுதலான அதிகாரங்களை பெற்று கொடுப்போம் என மக்களுக்கு உறுதி வழங்க முடியுமா? என்னைப் பொறுத்தவரை பதின்மூன்றை நிராகரிப்பவர்களால் மக்கள் முன் உறுதி வழங்க முடியாது.

பதின்மூன்றாவது திருத்தம் விரும்பியோ விரும்பாமலோ அரசியல் அமைப்பில் இருக்கின்ற விடயம். இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே இன்றும் அரசியலமைப்பில் 13 இருக்கிறது. அல்லாவிட்டால் வடக்கு-கிழக்கு பிரிந்தது போன்று தூக்கி எறியப்பட்டிருக்கும்.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கக் கூடிய அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் சிலவற்றை சாதிக்கக்கூடிய அல்லது கையாலாகக்கூடிய அதிகாரங்கள் அதில் இருக்கிறது.

மாகாண சபை ஆட்சி அதிகாரம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருந்தபோது அதை சரிவர பயன்படுத்தினோமா? இல்லை. தரகு அரசியல் செய்தோம்.

மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரம் காலத்துக்கு காலம் பறிக்கப்பட்டு வந்தது உண்மை. இருந்தாலும் இருக்கின்ற அதிகாரங்களை ஏன் நாங்கள் பயன்படுத்தவில்லை என்பதற்கு நாங்களே பொறுப்பு. சமஷ்டி தொடர்பில் பேசுகிறோம். தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம் பெற்று சபைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அதனை நிராகரிக்கிறோம் என யாராவது கூறமுடியுமா?

ஆகவே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்திக்கொண்டு அதைவிட அதிகாரம் உள்ள திருத்தத்தை கொண்டுவர முடியுமா என சிந்திப்பதே நடைமுறை சாத்திய விடயம்-என்றார்.

(அ- 02 - 05)


# கண்டல் காடுகளுக்கு மாணவர்கள் பயணம்



யாழ்ப்பாணம், ஜூலை 28

எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகம் மற்றும் சிறகுகள் அமையம் இணைந்து சர்வதேச கண்டல் காடுகள் தினத்தை (ஜூலை 26) முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையின் தொழில்நுட்ப அனுசரணையுடன் மாணவர்கள் மத்தியில் கண்டல் காடுகள் தொடர்பான விழிப்புணர்வையும் அவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலையையும் ஏற்படுத்துவதை மையமாகக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான கண்டல் காடுகள் ஊடான களப்பயணம் ஒன்று மண்டைதீவு சதுப்பு நிலப்பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் 70 பேர் பங்குபற்றினர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும்.

**இடபம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**

திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள்.

**கடகம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். பாதியில் நின்ற வேலைகள் முடியும்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். வளைந்து கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**கன்னி**

குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள்.

**துலாம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**விருச்சிகம்**

கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகையால் வீடு களைக்கட்டும். வாகன வசதிப் பெருகும். சாதிக்கும் நாள்.

**தனுசு**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மகரம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். போராட்டமான நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தொட்டது துலங்கும் நாள்.

# நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நாளை 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 04. 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, தெல்லிப்பழை, சிறீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரை வழங்க, சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவசிறீ து. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் திருக்கூட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மகாலிங்கம் நிரேஷ்குமார் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் ஆறுமுக ராசா பாலச்சந்திரன், நல்லூர் சங்கிலியன் மன்றத் தலைவர் இராமலிங்கம் சந்திரகுமார், நல்லூர் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சு. சத்தியேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலை நிகழ்வுகளை நல்லூர் சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களும் வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ர. நகுலாவும் சிறப்பு நிகழ்வாக "லலிதகலாவேதி" திருநாவுக்கரசு லவணியன் வழங்கும் இசைக் கச்சேரி நிகழ்வும் நடைபெறவுள்ளது.

(எ)

# பனைசார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி



யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை தென்னைவள, அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் இணைந்து நடத்திய மாகாண பனை எழுச்சி வாரத்தை முன்னிட்டு "எங்கள் வாழ்வியலில் பனை" என்ற தொனிப்பொருளில் நடத்திய பனைசார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, யாழ். மாநகர சபை உறுப்பினர் சு. கபிலன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந. திருலிங்கநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# நிலையான எதிர்காலத்துக்கு நாம் வழிவகுக்க வேண்டும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாவுக்கு ஒரு துடிப்பான, நிலையான எதிர்காலத்துக்கு வழி வகுக்க வேண்டும் என்று ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தால் (யு.என்.டி.பி.) நடத்தப்படும் வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் தேவைகள் மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணம் சுற்றுலாத்துறைக்கு பொருத்தமான இடம். பல முதலீட்டாளர்கள் சுற்றுலாத் துறையில் முதலீடு செய்வதற்காக வருகின்றனர். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக உலக வங்கி உட்கட்டுமான அபிவிருத்திகளுக்கு எங்களுக்கு உதவ இருக்கின்றது.

வெளிவிவகார வளத்திணைக்களம் (ஈ.ஆர்.டி.) வழங்கிய வழிகாட்டுதலுடன், எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக யு.என்.டி.பி. நிறுவனத்தால் இந்த முயற்சி சாத்தியமானது. இந்த செயல்முறை முழுவதும் காட்டப்பட்ட ஈடுபாடு மற்றும் அக்கறைக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இயற்கை நேயச்சுற்றுலாவை வளர்க்கும், எமது இயற்கை மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் மற்றும் மாகாண மற்றும் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிக்கும் ஒரு விரிவான திட்டத்தை வடிவமைக்க இந்த முயற்சி உதவும் என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம். வடக்கு மாகாணத்தில் சுற்றுலாவுக்கு ஒரு துடிப்பான, நிலையான எதிர்காலத்துக்கு வழி வகுக்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்துவோம்.

ஏனைய மாகாணங்கள் போர்க்காலங்களிலும் சுற்றுலாத்துறைக்கான அடிப்படைக் கட்டுமானங்களைக் கொண்டிருந்த நிலையில் துரதிஷ்டவசமாக வடக்கு மாகாணம் அவ்வாறானதொரு ஏதுநிலைகளைக் கொண்டிருக்கவில்லை. தற்போது தயாரிக்கப்படும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்ட முடியும் எனத் தெரிவித்தார்.

(எ-05)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சி கண்டது ஏற்றுமதி துறை!

கொழும்பு, ஜுலை 28

**நடப்பு ஆண்டின் முதல் 5 மாதங்களில் ஏற்றுமதித் துறை குறிப்பிடத்தக்க நேர்மறையான செயல்திறனையும் நிலையான முன்னேற்றத்தையும் காட்டி வருகிறது என்று இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மங்கள விஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், 2025ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மொத்த ஏற்றுமதி வருவாய் 693 கோடியே 33 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். கடந்த 2024ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இது 7.14 சதவீத வளர்ச்சியாகும்.

"மே 2025இல் பொருட்கள் மற்றும் சேவைத் துறைகளில் மொத்த ஏற்றுமதி வருவாய் 138 கோடியே 66 இலட்சம் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது மே 2024 உடன் ஒப்பிடும்போது 6.35 சதவீத வளர்ச்சியாகும்.

இது இலங்கையின் ஏற்றுமதித் துறையின் செயல்திறன் நிலை மற்றும் சந்தைகளை பன்முகப்படுத்தவும் போட்டித் தன்மையை மேம்படுத்தவும் மூலோபாய முயற்சிகளின் நேர்மறையான தாக்கத்தை பிரதிபலிக்கிறது.

2025 மே மாதத்தில் மட்டும், சரக்கு ஏற்றுமதி ஆண்டுக்கு ஆண்டு 1.70 சதவீதம் அதிகரித்து 102 கோடியே 85 இலட்சம் அமெரிக்க டொலர்களை எட்டியது. இலங்கை சுங்கத்தின் தற்காலிக தரவுகளின்படி, இந்த எண்ணிக்கையில் இரத்தினங்கள், நகைகள், பெற்றோலிய பொருட்களிலிருந்து கிடைக்கும் மதிப்பிடப்பட்ட வருவாயும் அடங்கும்.

2025 ஜனவரி முதல் மே வரையிலான காலகட்டத்தில் சரக்கு ஏற்றுமதி 534 கோடியே 42 இலட்சம் அமெரிக்க டொலர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 5.46 சதவீதம் அதிகமாகும். (ஐ)

## பொமைக்குள் போதைப்பொருள்!

கொழும்பு, ஜுலை 28

பொம்மைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 21 கிராம் கேரள கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - சீதுவையில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த 29 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## காட்டுக்கு சென்ற பெண் மாயம்!

கொழும்பு, ஜுலை 28

விறகு எடுப்பதற்காக காட்டுக்கு சென்ற பெண் காணாமல் போயுள்ளார். அவரை தேடும் பணி கடந்த 3 நாட்களாக இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா - மஸ்கெலியா லக்கம் தனியார் தோட்டத்தைச் சேர்ந்த வாய் பேச முடியாத 56 வயதான பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை காணாமல் போயிருந்தார். மூன்று நாள் தேடுதலில் அவர் மீட்கப்படவில்லை என்று தெரிய வருகிறது.

# மான் சுட்டுக் கொலை நால்வருக்கு மறியல்!

கொழும்பு, ஜுலை 28

கர்ப்பம் தரித்திருந்த மான் கொல்லப்பட்டமை தொடர்பில் பொலிஸார் இருவர் உட்பட 4 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளை - கலேவெல - மகுலுகஸ்வெவ - ஹீனுகல வனப்பகுதியில் அண்மையில் மான் ஒன்று கொல்லப்பட்டது.

இந்த சம்பவத்துடன், தொடர்புடைய பொலிஸார் இருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று முன்தினம் தம்புள்ளை நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், மானை சுட்டுக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட 3 துப்பாக்கிகளையும் நீதிமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கையர் ஒருவர் தமிழ்நாட்டில் கைது!

சென்னை, ஜுலை 28

சென்னை - செங்குன்றம் பகுதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்தார் என்று கூறப்படும் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் உரிய ஆவணங்களின்றி இந்தியாவுக்குள் பிரவேசித்துள்ளமை தெரிய வந்துள்ளது. இதையடுத்து கைது செய்யப்பட்ட அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவரை இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன. (ஐ)

# 10,000 சிவில் பாதுகாப்பு பிரிவினர் பொலிஸில் இணைக்கப்படுவர்!

கொழும்பு, ஜுலை 28

10 ஆயிரம் சிவில் பாதுகாப்புப் பிரிவினரை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளை அதிகரிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் மையப்படுத்தி சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாட்டுக்குள் போதைப் பொருள் கடத்தல் வலையமைப்பை தடுப்பதனூடாக போதைப்பொருள் பாவனையை குறைக்க முடியும். நாடளாவிய ரீதியில் இரவு மற்றும் அதிகாலை வேளையில் சுற்றிவளைப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் பிரதி அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## சிறையிலிருந்து தப்பிக்க ஆற்றில் குதித்தவர் மாயம்!

கண்டி, ஜுலை 28

சிறைச்சாலையிலிருந்து தப்பிக்க முயன்று மகாவலி ஆற்றில் குதித்த கைதி நீரில் மூழ்கி காணாமல் போனார்.

கண்டி - பல்லேகலை திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தக கம்பஹா - சீதுவையை சேர்ந்த 39 வயது நபரே இவ்வாறு காணாமல் போனார்.

அவரை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விசேட சோதனை நடவடிக்கை ஆரம்பம்!

கொழும்பு, ஜுலை 28

வனப்பகுதிகளுக்குள் துப்பாக்கிகளை எடுத்துச் செல்வது குறித்து விசேட சோதனை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று வனப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் உயிரிழந்தமையை அடுத்தே இந்த அறிவிப்பை திணைக்களம் வெளியிட்டுள்ளது. (ஐ)

## நாடு திரும்பிய மருத்துவர்கள் சேவைக்கு சேர்வதில் சிக்கல்!

கொழும்பு, ஜுலை 28

பல்வேறு காரணங்களுக்காக நாட்டை விட்டு வெளியேறிய நிபுணர்கள், மருத்துவர்கள் சேவைக்குத் திரும்புவதற்கான மேன்முறையீடுகளை சமர்ப்பித்திருந்தாலும் சுகாதார அமைச்சும் பொது சேவை ஆணையமும் அந்த கோரிக்கைகளை சேவையை விட்டு வெளியேறியதுபோல் கருதி நிராகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார், ஆயிரத்து 500 நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இந்நிலையில், மீளத் திரும்பிய 20 முதல் 50 மருத்துவர்கள் மீண்டும் சேவையில் சேர விருப்பம் தெரிவித்து கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பொதுச் சேவை ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் அவர்களை மீண்டும் பணியமர்த்த முடியாது என்று சுகாதார அமைச்சகம் சம்பந்தப்பட்ட மருத்துவர்களிடம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட கண்காணிப்பு அழைப்புகளின்போது, நாட்டில் மருத்துவர்கள், நிபுணர்களின் எண்ணிக்கை தற்போது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதால், சேவைக்குத் திரும்ப கோரிய மருத்துவர்களுக்கு, பொது சேவை ஆணையம் தொடர்புடைய நியமனங்களைச் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளராக பிரிகேடியர் பிரேங்க்ளின் ஜோசப்

கொழும்பு, ஜுலை 28

பாதுகாப்பு அமைச்சின் புதிய ஊடக பணிப்பாளராகவும் ஊடக பேச்சாளராகவும் பிரிகேடியர் பிரேங்க்ளின் ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவியை வகித்த கேணல் நளின் ஹேரத் ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து அவரின் இடத்துக்கு பிராங்க்ளின் ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவப் பொறியியலாளர் படையணி அதிகாரியாக இவர் முன்னர் செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படகு கவிழ்ந்து விபத்தில் இருவர் காப்பாற்றப்பட்டனர்!

கொழும்பு, ஜுலை 28

கடல் கொந்தளிப்பால் கவிழ்ந்த படகிலிருந்து மீனவர்கள் இருவரை இலங்கை கடலோர காவல்படையினர் மீட்டுள்ளனர்.

மாத்தறை - மிரிஸ்ஸ கடற்பரப்பில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், மீட்கப்பட்டவர்கள் 35, 63 வயதுடையவர்களே காப்பாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படகிலிருந்தவர்கள் மிரிஸ்ஸ - பண்டாரமுல்ல பகுதியிலிருந்து மீன்பிடிக்க கடலுக்கு சென்றிருந்தனர். அனர்த்தம் தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைய கடலோர கண்காணிப்பு படகு சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டு மீனவர்கள் இருவரும் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட இருவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை - அவர்கள் நலமாக இருக்கின்றனர் என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# 3 வயது பிள்ளையுடன் சூதாட்டத்தில் பங்கேற்ற பெண் உட்பட 16 பேர் கைது

கொழும்பு, ஜுலை 28

சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 3 வயது பிள்ளையுடன் தாய் ஒருவரும் மற்றும் 13 பெண்களுமாக 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை - வாத்துவை பகுதியில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் இருந்து பணம் உள்ளிட்ட மேலும் பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# போதைப்பொருளுடன் 5 இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஜுலை 28

பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கையில் 5 இளைஞர்கள் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - சீதுவை பொலிஸ் பிரிவின் ராஜபக்ஷபுர பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த கைது நடவடிக்கையில் ராகம, களனி, சீதுவ மற்றும் கட்டுநாயக்க பகுதிகளை சேர்ந்த 26, 27 மற்றும் 29 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 27 கிராம் 255 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 809 பாடசாலைகள் பெயரளவிலேயே தேசிய பாடசாலைகளாக தரம் உயர்வு

## வெளிப்படுத்தியது கோபா குழு

கொழும்பு, ஜூலை 28

**809 மாகாண பாடசாலைகள் பெயரளவில் மட்டுமே தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரியவந்துள்ளது.**

அத்துடன், இந்தப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுவதற்காக பெயர் பலகைகளுக்கு மாத்திரம் 24 இலட்சம் ரூபாய்க்கும் அதிக தொகை செலவிடப்பட்டுள்ளது என்றும் அறிய வந்துள் ளது.

சமீபத்தில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய முன்னிலையான போதே இந்த விடயங்கள் வெளியாகியுள்ளன.

கடந்த அரசாங்கத்தின் போது செயல்படுத்தப்பட்ட தேசிய பாடசாலை எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்கும் திட்டம் உட்பட கல்வி இராஜாங்க அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட 72 திட்டங்கள் தொடர்பாக 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது. (ஐ)

சப்ரகமுவ பல்கலை. மாணவன் மரணம்:

# விசாரணை குழுவின் அறிக்கை துணைவேந்தரிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 28

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பகிடிவதையால் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்தார். இந்த சம்பவம் குறித்து விசாரிக்க ஐவர் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை பல்கலைக்கழக துணைவேந்தரிடம் சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, இந்த அறிக்கை அடுத்த வாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று சப்ரகமுவ பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுனில் சாந்த தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த குறித்த மாணவரின் மரணம் தொடர்பில் விசாரணையில் கண்டறியப்பட்ட விடயங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிடும் எனவும் அவர் கூறினார்.

சம்பவம் தொடர்பாக சுமார் 70 மாணவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன என்று விசாரணைக் குழு தெரிவித்தது. (ஐ)

# மடகஸ்காரில் கைதான 8 மீனவர்களுக்கும் மறியல்

கொழும்பு, ஜூலை 28

மடகஸ்கார் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் எட்டு பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

'ரூட் பபா 6' என்ற நெடுநாள் மீன்பிடி படகு, கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி வென்னப்புவ பகுதியிலிருந்து ஆழ்கடலுக்குப் புறப்பட்டது.

கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டில் அவர்கள் கடந்த மாதம் 2 ஆம் திகதி மடகஸ்கார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர். கைதான மீனவர்களுக்கு உணவு, தண்ணீர் வழங்காது மடகஸ்கார் கடற்படை துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது.

அவர்களை விடுவிக்க அரசு முயற்சிகளை எடுத்திருந்தது. இந்நிலையில், மொழிபெயர்ப்பாளர்கள் சிக்கலால் கைதான மீனவர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். (ஐ)

# ஆடை ஏற்றுமதி 5.2 வீதம் உயர்வு!

கொழும்பு, ஜூலை 28

கடந்த 2024 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் கடந்த ஜூன் மாதத்தில் ஆடை ஏற்றுமதி 5.2 சதவீதம் அதிகரித்துள்ளது என்று கூட்டு ஆடை சங்கங்க ளின் மன்றம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சிய சந்தைகளில் ஏற்பட்ட வலுவான இலாபமே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, கடந்த ஜூன் மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான நாட்டின் ஏற்றுமதி 23.1 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதேநேரம், பிரித்தானியாவுக்கான ஏற்றுமதி 20.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மொத்த ஆடை ஏற்றுமதி 8.95 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து:

# உயர்நீதிமன்றின் தீர்ப்பை ஆராய்வதற்கு குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 28

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பேரழிவு தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்வதற்கு இரண்டு மூத்த அதிகாரிகள் கொண்ட குழுவை சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க நியமித்துள்ளார்.

இந்தக்குழு, குறித்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளை பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, முன்னாள் சட்டமா அதிபர் நாட்டின் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கு மாறாக சிங்கப்பூர் நீதிமன்றத்தில் எக்ஸ்பிரஸ் பேர்ள் குழும நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள எடுத்த முடிவு, நியாயமற்றது, பகுத்தறிவற்றது மற்றும் தன்னிச்சையான முடிவு என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.

அத்துடன், கப்பல் நிறுவனம் முதல் கட்டமாக, 100 கோடி அமெரிக்க டொலர்களை இழப்பீடாக செலுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததும் தெரிந்ததே. (ஐ)

# காசோலை மோசடி செய்தால் அபராதம் அல்லது சிறை!

## வருகிறது புதிய சட்டத் திருத்தம்

கொழும்பு, ஜூலை 28

வங்கிகளில் போதுமான நிதி இல்லாமல் காசோலை வழங்குபவருக்கு அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படும் வகையில் சட்டத்திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

விரைவில் இது தொடர்பான சட்டத்திருத்தம் பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது என்று கொழும்பு ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

போதுமான நிதி இல்லாமல் காசோலைகளை வழங்குவோரும் மூடிய கணக்கிலிருந்து காசோலைகளை வழங்குவோரும் இந்த சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள்.

வங்கிகளுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்கும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த திருத்தங்களின் கீழ் விதிக்கப்படும் அபராதம், வங்கியில் உரிய நிதியின்றி திரும்பிய காசோலைக்குச் சமமான தொகையாக இருக்கும் என்று முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் காசோலையை வழங்கிய ஒருவர், காசோலையைப் பெற்றவரின் கோரிக்கையின் கீழ் 90 நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தாது போனால் இந்த திருத்தத்தின்கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காலியில்சோதனை 24 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 27

காலியில் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் 24 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விசேட சோதனை நடவடிக்கை நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்கள், போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நோக்கில் இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (ஐ)

# வெலிக்கடை சிறையில் சோதனை 6 கைபேசிகள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஜூலை 27

முன்னாள் அமைச்சர்கள் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ள வெலிக்கடை சிறையின் கே பிரிவில் நடத்தப்பட்ட சோதனையில் 6 கைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

சிறைச்சாலையின் விசேட குழு நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன், வேறு சில சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.

சிறையின் கே பிரிவில் நடத்தப்பட்ட சோதனையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சிறைப் பிரிவில் தண்டனை விதிக்கப்பட்ட பல முன்னாள் அமைச்சர்கள் கைதிகளாக உள்ளனர் என்று கூறப்படுகிறது.

மகிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னாண்டோ, எம்.எஸ். ரஞ்சித் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் அந்த சிறைப் பிரிவில் தங்கியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# "முகம், பின்புலம் பார்த்து எவரும் கைது செய்யப்படுவது இல்லை"

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் சில பிரபலமானவர்கள் கைது செய்யப்படுவது அவர்களின் முகத்தையும் பின்புலத்தையும் பார்த்து அல்ல. முறையாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள் ஊடாகவே இந்த கைதுகள் இடம்பெறுகின்றன. எனவே, எதிர்க்கட்சிகள் எவ்வாறான விமர்சனங்களை முன்வைத்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது இடைநிறுத்தப்பட மாட்டாது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

யாரும் முகம் பார்த்து கைது செய்யப்படுவதில்லை. மத்துகமவில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததன் காரணமாகவே ஜகத் விதானகேயின் மகன் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கின்றனர். அவர் மீதான விசாரணைகள் கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டன. அந்த விசாரணைகளுக்கமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற மற்றும் பொலிஸ் விசாரணைகளில் எந்த வகையிலும் அரசியல் தலையீடு இல்லை.

கைது செய்யப்படும் எந்தவொரு நபரும் தாம் குற்றமற்றவர் என்பதை நீதிமன்றத்தில் நிரூபிக்கமுடியும்.

ஜனாதிபதி பதவியேற்று 9 மாதங்கள் கடந்துள்ளன. 9 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வந்துள்ளோம். சர்வதேச நிறுவனங்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன. அந்நிய செலாவணி அதிகரித்துள்ளதோடு, வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வர ஆரம்பித்துள்ளனர். என்றார்.

# போதைப்பொருள் விருந்து பெண் உட்பட 21 பேர் கைது

கொழும்பு, ஜூலை 28

பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்தில் போதைப்பொருள் பயன்படுத்தினர் என்று கூறப்படும் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடுவலை, வெலிவிட்ட பகுதியில் உள்ள விருந்தகமொன்றில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் 20 ஆண்களும் பெண் ஒருவரும் அடங்குவர். இந்த நடவடிக்கையின் போது அதிகாரிகள் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை கைப்பற்றியுள்ளனர்.

இந்த விருந்து பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், போதைப் பொருள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்து விழிப்புடன் இருப்பதாக தெரிவித்துள்ள பொலிஸார், பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள், சட்டவிரோத பொருட்கள் தொடர்பான நிகழ்வுகளில் பங்கேற்பதைத் தவிர்க்குமாறு கோரியுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு பிரதி அமைச்சர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை!

## அவர் பதவி விலகாதுவிடின் வரும் என்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு, ஜூலை 28

"பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர உடன டியாக பதவியிலிருந்து விலக வேண்டும் அல்லது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் நீக்கப்பட வேண்டும். அவ் வாறு இல்லாவிட்டால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதற்கு நாங்கள் தயாராகி வருகி றோம்", என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும், 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தாக் குதல்கள் நடைபெற்ற தருணத் தில் கிழக்கு மாகாண கட்ட ளைத் தளபதியாக இருந்தவர் அருண ஜயசேகர. தற்போது அவர் பாதுகாப்பு பிரதி அமைச் சராக பதவி வகிக்கிறார். உண் மையில், இதுவொரு முரண்பா டான விடயமாகும்.

தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக் குதல்களுக்கு பொறுப் புக்கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாக வாக்குறுதி அளித்து. தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்த மான விசாரணைகள் முன்னெ டுக்கப்படுவதாக கூறினாலும் அதுபற்றிய தகவல்களை வெளி யிடுவதற்கு தயாராக இல்லை.

அவ்வாறான நிலையில் தாக் குதல்கள் நடத்தப்படும்போது கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருக்கும் ஒருவர் பிரதி பாதுகாப்பு அமைச்சராக பதவியில் இருக்கும்போது எவ் வாறு நீதியான சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப் படும் என்பது எமது கேள்வியா கவுள்ளது.

ஆகவே, உடனடியாக அருண ஜயசேகர தனது பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவி யிலிருந்து விலக வேண்டும். இல்லையென்றால் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நியாயமாகவும் சுயாதீனமா கவும் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

அவ்வாறில்லாது அவர் தொடர்ந்தும் பதவியில் நீடிப் பாராக இருந்தால் அவ ருக்கு எதிராக நாம் நம்பிக்கையில் லாப் பிரேரணையை கொண்டு வருவோம்.

இதற்கு பொது எதிரணியின் ஆதரவை பெறுவோம் - என் றார். (ஐ)

### ரூபாயின் பெறுமதி 3.1 சதவீதம் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை 28

இந்த ஆண்டு ஜூலை 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 3.1 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரி வித்துள்ளது.

இது கடந்த வார இறுதியில் 3 சதவீதமாகக் காணப்பட்டது. அத்துடன், ஜூன் மாதத்தின் இறுதி வாரத்தில் அதன் பெறு மதி 2.5 வீதமாக இருந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரி வித்துள்ளது. (ஐ)



இலங்கையின் மிகப்பெரிய விருந்தோம்பல் வர்த்தக கண்காட்சியை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க திறந்து வைத்தபோது...!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்

# சூத்திரதாரிகள் விரைவில் வெளிப்படுத்தப்படுவார்கள்

## அமைச்சர் சமந்த விஜயரத்ன

கொழும்பு, ஜூலை 28

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் தொடர்பில் பேராயர் மல் கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட அனைவரும் தற் போது விசாரணைகள் நியாய மாக முன்னெடுக்கப்பட்டு வரு வதை நன்கு அறிவார்கள். இத னுடன், தொடர்புடைய சூத்தி ரதாரிகள் விரைவில் சமூகத் துக்கு வெளிப்படுத்தப்படுவர் என அமைச்சர் சமந்த வித்யா ரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் தொடர்பில் ஒரு குறிப் பிட்ட கால கட்டத்தில் பேசு பொருளாகக் காணப்பட்டது. பேராயர் மல்கம் கர்தினால் ரஞ் சித் ஆண்டகை உள்ளிட்ட அனைவரும் தற்போது விசார ணைகள் நியாயமாக முன்னெ டுக்கப்பட்டு வருவதை நன்கு அறிவார்கள். கடந்த ஆட்சி காலங்களில் விசாரணைகள் தொடர்பில் நம்பிக்கையற்ற தன்மையே காணப்பட்டது.

கடந்த காலங்களில் விசார ணைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவில்லை. ஆனால், இன்று சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள் ளது. நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் என்பன சுயாதீனமாக செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பேரழிவின் சூத்திர தாரிகள் யார் என்பது விரை வில் வெளிப்படுத்தப்படும். நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளாது விரைவில் இந்த உண்மைகள் சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படும் என்று நம்புகிறோம். சஜித் பிரேமதாஸ நீண்ட காலம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பதவியையும் வகிக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம். இலங்கையின் அரசியல் வர லாற்றில் இந்தளவுக்கு எதிர்க் கட்சி பிளவடைந்திருக்க வில்லை. உள்ளக ரீதியில் அவர் களாலேயே பிரச்னைகள் உரு வாக்கப்படுகின்றன. இவற்றில், அநாவசியமாக கவனம் செலுத் தாமல் நாம் எமது பாதையில் பயணிப்போம் - என்றார். (ஐ)

# 145,188 சுற்றுலாவிகள் இம்மாதத்தில் வருகை

கொழும்பு, ஜூலை 28

நடப்பு மாதத்தின் இதுவ ரையான நடுப்பகுதிவரை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 188 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற் றுலா அபிவிருத்தி அதிகார சபை யின் தரவுகள் தெரிவிக்கின் றன.

சுற்றுலா அபிவிருத்தி அதி கார சபையின் தரவுகளின்படி, இந்தியாவில் இருந்து அதி களவாக 27 ஆயிரத்து 786 சுற் றுலாப் பயணிகள் வருகை தந் துள்ளனர். ஐக்கிய இராச்சி யத்திலிருந்து 16 ஆயிரத்து 750 பேரும் நெதர்லாந்திலிருந்து 10 ஆயிரத்து 809 பேரும் சீனாவி லிருந்து 5 ஆயிரத்து 904 பேரும் பிரான்ஸில் இருந்து 7 ஆயிரத்து 732 பேரும் வருகை தந்துள்ளனர்.

இதேசமயம், 13 இலட்சத்து 13 ஆயிரத்து 232 சுற்றுலா பய ணிகள் இந்த ஆண்டில் மட்டும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் இதில், 2 இலட்சத்து 69 ஆயி ரத்து 780 பேர் இந்தியர்கள் என் பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வேறுபாடுகளை அமைதிவழி பேச்சு மூலம் தீர்க்கவேண்டும்

## கம்போடியா, தாய்லாந்துக்கு அறிவுரை கூறுகிறது இலங்கை

கொழும்பு, ஜூலை 28

"அகிம்சை, கருணை மற்றும் சமாதான சகவாழ்வு ஆகிய வற்றை மையமாகக் கொண்ட புத்த பகவானின் காலத்தால் அழியாத போதனைகளால் வழி நடத்தப்படும் நாடாக இலங்கை கம்போடியா - தாய்லாந்து நாடு கள் அமைதியான முறையில் வேறுபாடுகளைத் தீர்க்கும் நோக்கில் விரைவான இராஜ தந்திர பேச்சுகளில் ஈடுபட வேண்டும்", என்று இலங்கை வலியுறுத்தியுள்ளது.

கம்போடியா - தாய்லாந்து எல்லையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்தே அரசாங்கம் மேற்கண் டவாறு இரு நாடுகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், கம்போடியா, தாய்லாந்து மோதல்கள் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையும். அத் துடன், இரு நாடுகளின் மக்க ளுக்கும் பெரும் துன்பத்தை விளைவிக்கும். வரலாற்று ரீதி யாகவும் கலாசார ரீதியாகவும் நெருங்கிய உறவுகளை கொண் டுள்ள கம்போடியாவும் தாய் லாந்தும் தங்களுக்கு இடையி லான பிரச்னைகளை பேச்சு மூலம் தீர்த்துக்கொள்ள வேண் டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடு.

கம்போடியா, தாய்லாந்து இடையே எல்லை மோதல் ஏற் பட்டுள்ளது. இந்த மோதலில் இராணுவத்தினர் உட்பட 33 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்க ணக்கானவர்கள் இடம்பெயர்ந் துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ஜனாதிபதி அநுர குமார இன்று மாலைதீவு பயணம்

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான உயர்மட்ட தூதுக்குழு 3 நாட் கள் உத்தியோகபூர்வ பயண மாக இன்று திங்கட்கிழமை மாலைதீவு பயணமாகிறது.

இந்தக் குழுவினர் எதிர்வரும் புதன்கிழமை வரை அங்கு தங்கியிருப்பர். மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸு வின் அழைப்பின்பேரிலேயே ஜனாதிபதி அங்கு செல்கிறார்.

இந்தப் பயணத்தில் இரு தரப்பு பேச்சுகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறப்படவுள் ளன. அத்துடன், இலங்கை - மாலைதீவு முறையான இராஜ தந்திர உறவு நிறுவப்பட்டு 60ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படவுள்ளது.

இதேசமயம், இந்தப் பய ணத்தின்போது, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வர்த் தக மாநாட்டிலும் சிறப்புரை ஆற்றவுள்ளார். மேலும், வெளி நாட்டு வர்த்தக குழுக்களையும் சந்திக்கவுள்ளார். ஜனாதிபதி யுடனான இந்த பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சில முக் கிய அதிகாரிகளும் பங்கேற்பர் என்று தெரியவருகிறது. (ஐ)

# பேருந்து சாரதியை தாக்கிய பெண் உட்பட நால்வர் கைது

கொழும்பு, ஜூலை 28

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து சாரதியை தாக்கிய சம்பவம் தொடர்பாக பெண்ணொருவர் உட்பட நால் வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி - ஹந்தான பகுதியில் கடந்த 25 ஆம் திகதி விபத்து ஒன்றையடுத்து பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற சாரதி கடுமையாக தாக்கப் பட்டார். இந்த நிலையில், இந் தச் சம்பவத்துடன் தொடர்பு டையவர்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய் தனர்.

கைதானவர்கள் கண்டியை சேர்ந்த 21, 26, 27 மற்றும் 38 வயது பெண் ஆவர். கைதா னோர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். பெண்ணை பிணையில் விடுவித்த நீதிவான் ஏனைய மூவரையும் விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிட் டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய பாரதி பயன்படுத்திய அலுவலகங்களில் சோதனை

கல்முனை, ஜுலை 28

அம்பாறை மாவட்டத்தில் இனிய பாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே. புஷ்ப குமார் பயன்படுத்திய அலுவலகங்கள் மற்றும் முகாம்களில் நேற்று முன்தினம் பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அணியினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவி னரால் ஏற்கனவே கைது செய் யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டிருந்த சந்தேக நபர்கள் வெள்ளை நிற ஆடை அணிந்து அவ்விடத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். அந்த நபர் கள் இனங்காட்டியதற்கமைய கடந்த காலத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவ லகம் மற்றும் பிரதான முகா மாக செயல்பட்ட கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தாளவெட்டு வான் சந்திக்கு அருகாமையில் உள்ள பெரிய வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கடும் பாதுகாப்புக்கு மத்தி யில் அழைத்து வரப்பட்ட சந் தேக நபர்களுடன் நீண்ட நேர மாக குறித்த வீட்டில் தரித்து நின்ற புலனாய்வுப் பிரிவினர் சோதனை மேற்கொண்ட பின் னர் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

தற்போது குறித்த வீட்டின் முன்பகுதி உணவகம் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து 2004 ஆம் ஆண்டு பிரிந்து சென்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு (பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன்), கருணா அம் மான் எனப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் தலைமை யில் பலர் செயல்பட்டிருந்தனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு, கல்முனை, வேப்பயடி மத்தி யமுகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை சேனைக்குடியி ருப்பு, அக்கரைப்பற்று, திருக் கோவில் விநாயகபுரம், காரை தீவு 40 ஆம் கட்டை தம்பட்டை பொத்துவில், கோமாரி காஞ்சி னங்குடா, ஊறணி கஞ்சிக்கு டிச்சாறு என பல முகாம்களும் அலுவலகங்களும் செயல்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (எ-01)

# யுத்தத்தில் சரணடைந்த எம் குழந்தைகள் எங்கே?




திருக்கோவில், ஜுலை 28

சிறிலங்கா அரசே? இறுதி யுத்தத்தில் சரணடைந்த எம் குழந்தைகள் எங்கே? என்று கேள்வி எழுப்பி அம்பாறையில் நேற்று முன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு சமூக இயக்கம், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் இணைந்து வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீ திகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத் தியே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தம் பிலுவில் மத்திய சந்தை முன் பாக வலிந்து காணாமல் ஆக் கப்பட்ட உறவுகளின் சங்கம், மனித உரிமை செயல்பாட்டா ளர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளுக்கான நீதி, படு கொலை செய்யப்பட்ட உறவுக ளுக்கான நீதி, தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு, தமிழர் தேச வளச் சுரண்டல்கள் மற் றும் மனித உரிமை செயல்பாட் டாளர்கள் மீதான அத்துமீறல் கள் போன்ற பல விடயங்க ளுக்கு சர்வதேச நீதி விசாரணை கோரி போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது. (எ-01)

## மாணவிகளுக்கு விழிப்புணர்வு

கல்முனை, ஜுலை 28

அம்பாறை மாவட்டம், கல்0 முனை மஹ்மூத் மகளிர் கல்லூ ரி மாணவிகளுக்கு சிறுவர் துஷ் பிரயோகம் தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக் கில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் அனுசர ணையில் கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் நேற்று விசேட செயலமர்வு நடைபெற்றது.

இதில், வளவாளராக கல் முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரும் பொதுமக்கள் பாதுகாப்புக் குழுவின் பொறுப் பதிகாரியான வாஹித் கலந்து கொண்டார்.

இதன்போது, சிறுவர் துஷ் பிரயோகத்தை தடுத்தல், அதிலி ருந்து சிறுவர்களைப் பாதுகாத் தல், துஷ்பிரயோகத்தின் வகை கள்,சிறுவர் துஷ்பிரயோ கத்துக்கு எதிரான சட்டங்கள் பற்றிய தக வல்கள் நிகழ்த்துகை மூலம் விளக்க மளிக்கப்பட்டன.

# மொழி பெயர்ப்பாளர்களாக ஏழு பேருக்கு நியமனம்



கல்முனை, ஜுலை 28

அம்பாறை, கல்முனை மாவட்ட நீதிமன்றத்தின் நியா யாதிக்க எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலிருந்து சத்தியப் பிரமாண மொழி பெயர்ப்பா ளர்களாக 07 பேர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சால் கடந்த ஜன வரி 18 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட்ட போட்டி பரீட் சையில் சித்தியடைந்த இவர்கள் கல்முனை மாவட்ட நீதிபதி ஏ. எம். முஹமட் ரியால் முன்னி லையில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

இவர்களில் அநேகர் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பதிவிலக்கங் களை வழங்க அமைச்சு நடவ டிக்கை எடுத்துள்ளது. (எ-01)

# செம்மணி மனிதப் புதைகுழி இனப்படுகொலையின் சாட்சி

## மட்டக்களப்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜுலை 28

செம்மணி மனிதப் புதைகுழி இனப்படுகொலையின் சாட்சி, தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப் புக்கு சர்வதேச நீதிப் பொறி முறை கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று முன் தினம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்க ளான ஞா. சிறிநேசன், இளை யதம்பி சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம் பாக்கியநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவு களின் சங்கப் பிரதிநிதிகள் மற் றும் சமூக செயற்பாட்டாளர் கள் ஒன்று திரண்டனர்.

இதன்போது, செம்மணி மனிதப் புதைகுழி இனப்படு கொலையின் சாட்சி மற்றும் சர்வதேச விசாரணை கோரி பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கோஷங்கள் எழுப்பிய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர். பின்னர், கையெழுத்தை பதிவு செய்து ஆர்ப்பாட்டக்கா ரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர். (எ)

# பெண்ணின் கையை பிடிக்க முற்பட்ட திருமண தரகருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஜுலை 28

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் வீடு ஒன்றில் அத்துமீறி உள்நுழைந்து தனிமையில் இருந்த பெண்ணின் கையைப்பிடித்து இழுக்க முற் பட்ட குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்ட திரு மணச் சேவை தரகரை எதிர்வ ரும் 12ஆம் திக திவரை 14 நாட் கள் விளக்கமறி யலில் வைக்கு மாறு மட்டக்க ளப்பு நீதிவான் நீதிமன்ற நீதி வான் உத்தரவிட் டார்.

குறித்த பிரதேசத்தில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் திரு மண தரகர், பெண் ஒருவரை ஆண் ஒருவருக்கு திருமணம் பேசி திருமணம் முடித்துவைத்து அதற்கான தரகு பணத்தை பெண் மற்றும் மாப்பிள்ளை வீட்டா ரிடம் பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் அண்மை யில் திருமணம் முடித்த பெண் ணின் கணவர் வேலைக்குச் சென்ற பின்னர் வீட்டில் பெண் தனிமையில் இருந்து வந்துள்ள நிலையில், வீட்டின் வாசல் கதவை திறந்து சட்டவிரோத மாக நுழைந்து வாசல் கதவில் அவரது தொலைபேசி இலக் கத்தை எழுதிவிட்டு சென்றுள் ளார்.

திருமண தரகரின் இந்தச் செயல்பாடு தொடர்பில் கணவ னிடம் மனைவி தெரிவித்ததை யடுத்து அவரை கணவர் தொலைபேசி ஊடாக எச்சரித்த நிலையில், குறித்த திருமண தர கர் சம்பவதினமான வியாழக்கி ழமை பகல் பெண்ணின் வீட்டுக் குள் நுழைந்து தனிமையில் இருந்த பெண்ணின் கையை பிடித்து இழுக்க முற்பட்ட... யடுத்து அவர் அலறியடித்துக் கொண்டு ஓடி வீட்டை விட்டு வெளியேறி அயலவர் வீட்டுக் குள் புகுந்ததையடுத்து, அவர் அங்கிருந்து தப்பி ஓடியுள் ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

இதனையடுத்து குறித்த பெண் பொலிஸ் நிலைய பெண் கள் பிரிவில் செய்த முறைப் பாட்டுக்கமைய 2 பிள்ளைக ளின் தந்தையான 40 வயது டைய திருமண தரகரை கைது செய்து மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலையில் கடந்த 25 ஆம் திகதி முற்படுத் தியதையடுத்து அவரை எதிர்வ ரும் 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார். (எ)

# தம்பலகாமத்தில் வீடொன்று தீப்பற்றியதில் முற்றாக நாசம்



திருகோணமலை, ஜுலை 28

திருகோணமலை மாவட் டம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுப்பிரப்பந் திடல் கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியில் நேற்று முன்தி னம் வீடொன்று தீப்பற்றி எரிந்ததில் முற்றாக சேதமடைந் தது. அதிகாலை 02. 00 மணிய ளவில் வீடு தீப்பற்றியுள்ளதாக தெரியவருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து - கம்போடியா போர் தீவிரம்: 33 பேர் பலி!

## அமெரிக்கா - சீனா மறைமுக போர்

பாங்கொக், ஜூலை 28

**தாய்லாந்து - கம்போடியா இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. இந்தப் போரில் இருதரப்பிலும் இதுவரை 33 பேர் உயிரிழந்தனர்.**

தென்கிழக்கு ஆசியாவில் தாய்லாந்து அமைந்துள்ளது. இதன் அண்டை நாடு கம்போடியா. இரு நாடுகளும் 817 கிலோ மீற்றர் தொலைவு எல்லையை பகிர்ந்து கொள்கின்றன. பண்டைய காலத்தில் முதலாம் ராமா மன்னரால் தோற்றுவிக்கப்பட்ட ரத்தனகோசின் பேரரசு தாய்லாந்தை ஆட்சி செய்தது. இதே போல இரண்டாம் ஜெயவர்மன் மன்னரால் தோற்றுவிக்கப்பட்ட கெமர் பேரரசு கம்போடியாவை ஆட்சி செய்தது. இந்து மதத்தைப் பின்பற்றிய ரத்தனகோசின், கெமர் பேரரசுகள் தங்களது ஆட்சிக் காலத்தில் ஏராளமான இந்து கோவில்களை கட்டின. தற்போது இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் உள்ள இந்துக் கோவில்களை சொந்தம் கொண்டாடுவதில் பிரச்னை எழுந்து போராக வெடித்திருக்கிறது.

கம்போடியா - தாய்லாந்து எல்லையில் டாங்கிரெக் மலையில் அமைந்துள்ள பிரியா விகார் என்ற சிவன் கோவிலை இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடின. இது தொடர்பில் கடந்த 1959ஆம் ஆண்டில் இரு நாடுகளும் சர்வதேச நீதிமன்றத்தை நாடின. கடந்த 1962 ஆம் ஆண்டில், பிரியா விகார் கோவில் கம்போடியாவுக்கு சொந்தமானது என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதை ஏற்றுக் கொள்ளாத தாய்லாந்து, இந்த கோவில் தங்கள் நாட்டுக்கு சொந்தமானது என்று இன்றுவரை கூறி வருகிறது.

தாய்லாந்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தா முயென் தாம், தா முயென் டோட், தா குவாய் ஆகிய 3 இந்து கோவில்கள் உள்ளன. இவை 12ஆம் நூற்றாண்டு கோவில்கள் ஆகும். எல்லைப் பகுதியில் உள்ள இந்தக் கோவில்களை கம்போடியா சொந்தம் கொண்டாடி வருகிறது.

இந்தச் சூழலில் கடந்த 24 ஆம் திகதி தா முயென் தாம் கோவில் வளாகத்தில் கம்போடிய இராணுவத்தின் ட்ரோன்கள் பறந்ததாகவும், கம்போடிய இராணுவத்தினர் கோவிலை நோக்கி முன்னேறியதாகவும் கூறப்படுகிறது. இதன்காரணமாக தாய்லாந்து - கம்போடிய இராணுவத்தினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இருதரப்பினரும் மிகக் கடுமையான பீரங்கி தாக்குதலில் ஈடுபட்டனர்.

கடந்த 25ஆம் திகதி தாய்லாந்து - கம்போடியா எல்லையின் 12இற்கும் மேற்பட்ட இடங்களில் மோதல் வெடித்தது. கம்போடியாவின் 7 இடங்களை குறிவைத்து தாய்லாந்து போர் விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் ஏராளமானோர் படுகாயமடைந்தனர். மூன்றாவது நாளாக இருநாடுகளுக்கும் இடையே நேற்று முன்தினமும் அதிதீவிரமாக போர் நடைபெற்றது.

3 நாட்கள் போரில் தாய்லாந்தில் 6 இராணுவத்தினரும் 14 பொதுமக்கள் என 20 பேர் உயிரிழந்தனர். கம்போடியாவில் 5 இராணுவத்தினர் 8 பொதுமக்கள் என 13 பேர் உயிரிழந்தனர். இரு நாடுகளில் இதுவரை 33 பேர் உயிரிழந்தனர். இருதரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். எல்லைப் பகுதிகளில் வசித்த இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப் போர் தொடர்பில் ஐ.நா. பாதுகாப்பு சபையின் அவசர கூட்டம் நியூயோர்க்கில் நடைபெற்றது. இதில், தாய்லாந்து - கம்போடியா இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. மலேசியாவின் சமரசத்தின்பேரில் கடந்த வெள்ளிக்கிழமை போர் நிறுத்தம் அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், தாய்லாந்து இராணுவம் போர் நிறுத்தத்தை மீறி செயல்படுவதாக கம்போடியா குற்றஞ்சாட்டியுள்ளது. தற்போதைய நிலையில் இரு நாடுகள் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது.

அமெரிக்க ஆதரவு நாடான தாய்லாந்துக்கும் சீன ஆதரவு நாடான கம்போடியாவுக்கும் இடையே போர் மூண்டுள்ளது. இராணுவ பலத்தை ஒப்பிடும் போது தாய்லாந்து மிகவும் வலுவாக இருக்கிறது. அமெரிக்காவின் எவ் 16 போர் விமானங்கள் உட்பட அதிநவீன ஆயுதங்கள் அந்த நாட்டிடம் உள்ளன. ஆனால், கம்போடியாவிடம் போர் விமானங்களே கிடையாது. சீன தயாரிப்பு ட்ரோன் கள் மற்றும் சீன, ரஷ்ய தயா ரிப்பு பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை அந்த நாடு பயன்படுத்தி வருகிறது.

தற்போது கம்போடியாவின் சிகனுவோக்வில்லே பகுதியில் உள்ள கடற்படை தளத்தை சீன இராணுவம் புதுப்பித்து கொடுத்துள்ளது. அங்கு சீன போர்க்கப்பல்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும், கம்போடியாவின் அங்கோர் சர்வதேச விமான நிலையம், தலைநகர் நாம்பென்னில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை சீன நிறுவனங்கள் புதுப்பித்து கொடுத்துள்ளன. இந்த விமான நிலையங்களை சீன தரப்பு இராணுவ பயன்பாட்டுக்கு பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. சுருக்கமாக சொல்வதென்றால் தாய்லாந்து, கம்போடியா இடையே நடைபெறும் போர், அமெரிக்கா - சீனா இடையிலான மறைமுக போராகும் என்று சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் சுந்தர் பிச்சை



வாஷிங்டன், ஜூலை 28

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுந்தர் பிச்சை உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

இந்தியாவின் தமிழகத்தில் நடுத்தர குடும்பத்தில் பிறந்து தனது கல்வியறிவின் மூலம் ஸ்டான்போர்ட் பல்கலையில் கடந்த 1993இல் உதவித் தொகை பெற்று உயர் கல்வியை முடித்தவர் சுந்தர் பிச்சை. இவர் கடந்த 2004இல் கூகுள் நிறுவனத்தில் சேர்ந்து 10 ஆண்டுகளில் தலைமைப் பொறுப்பை வகிக்கும் அளவுக்கு தனது திறனை வளர்த்துக் கொண்டார்.

கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக கடந்த 2015இல் பொறுப்பேற்ற சுந்தர் பிச்சை ஆல்பபெட் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை 2019இல் ஏற்றுக் கொண்டார்.

சுந்தர் பிச்சை தலைமைப் பொறுப்பில் இருந்த காலத்தில் ஆல்பபெட் நிறுவன பங்கின் விலை பல மடங்கு அதிகரித்து 2023ஆம் ஆண்டிலிருந்து முதலீட்டாளர்களுக்கு 120 சதவீத வருவாயை வழங்கியுள்ளது.

அந்த வகையில், சுந்தர் பிச்சையின் சொத்து மதிப்பும் 1. 1 பில்லியன் டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 35,000 கோடி ரூபாய்) அளவுக்கு அதிகரித்துள்ளது. இதன் மூலம் அவர் உலக பில்லியனர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளதாக புளும்பெர்க் நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# அமெரிக்காவின் முடிவை நாங்கள் எதிர்க்கவில்லை

## பாகிஸ்தான் அமைச்சர் சொல்கிறார்



வாஷிங்டன், ஜூலை 28

தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு பட்டியலில் சேர்த்து அமெரிக்கா அண்மையில் அறிவித்தது. இந்த முடிவை நாங்கள் எதிர்க்கவில்லை என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இஷாக் தார் தெரிவித்தார்.

வாஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் மேலும் கூறுகையில்,

"டி. ஆர். எவ். இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இது அமெரிக்காவின் இறையாண்மை முடிவாகும். டி.ஆர். எவ்வை பயங்கரவாதக் குழுவாக அமெரிக்கா பட்டியலிடுவதில் பாகிஸ்தானுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பஹல்காம் தாக்குதலில் அந்த இயக்கத்தினர் சம்பந்தப்பட்டதற்கான ஏதேனும் ஆதாரங்கள் இருந்தால் நாங்கள் வரவேற்கிறோம். டி.ஆர்.எவ்வை லஷ்கர்-இ-தொய்பா அமைப்புடன் இணைப்பது தவறானது. அந்த அமைப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானால் அகற்றப்பட்டது" என்றார். (எ)

# மூத்த ஹிஸ்புல்லா தளபதி படுகொலை

## இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

டெல் அவிவ், ஜூலை 28

மூத்த ஹிஸ்புல்லா தளபதி படுகொலை செய்யப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக உள்ள எதனையும் நீக்கும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடுவோம் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபரில் கொடூரத் தாக்குதல் நடத்தியதில், இஸ்ரேல் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பணயக் கைதிகளாக சிலர் சிறை பிடித்து செல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக, காஸாவை இலக்காக கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 59 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் பலியாகினர்.

இந்த நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் நேற்று வெளியிட்ட செய்தியில், பிந்த் பெயில் பிரிவை சேர்ந்த, அலி அபித் அல்-காதிர் இஸ்மாயில் என்ற மூத்த ஹிஸ்புல்லா தளபதி படுகொலை செய்யப்பட்டார். தெற்கு லெபனானில் பயங்கரவாத அமைப்பை புனரமைப்பு செய்யும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வந்தார். இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக உள்ள எதனையும் நீக்கும் நடவடிக்கையில் இராணுவம் தொடர்ந்து ஈடுபடும் என்றும் தெரிவித்துள்ளது.

# உலகின் மிகவும் நம்பிக்கையான தலைவர்களில் மோடி முதலிடம்

## 8ஆவது இடத்தில் டொனால்ட் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜூலை 28

உலகின் மிகவும் நம்பிக்கையான தலைவர்களில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல் இடம் கிடைத்துள்ளது.

உலகத் தலைவர்களில் நம்பிக்கையான தலைவர் யார் என்று சமீபத்தில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் ஒவ்வொரு நாட்டு தலைவரும் எப்படி நடந்து கொள்கின்றனர் என்றும் ஆய்வு செய்யப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த புலனாய்வு நிறுவனம் இந்த ஆய்வை நடத்தியது.

இந்த ஆய்வின்போது, உலகத் தலைவர்களுக்கு அவர்களது சொந்த நாட்டில் எவ்வளவு மதிப்பளிக்கிறது என்றும் பொதுமக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அத்தோடு உலக நாடுகளில் எந்த அளவுக்கு மரியாதை இருக்கிறது என்றும் ஆய்வு செய்யப்பட்டது.


இவை மட்டுமல்லாமல் ஒவ்வொரு நாட்டு தலைவரும் எந்த அளவுக்கு நம்பகத்தன்மையுடன் நடந்து கொள்கின்றனர் என்றும் முந்தைய நிகழ்வுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த ஆய்வு மற்றும் மதிப்பீடு முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் 8 இடங்களை பிடித்து இருக்கும் தலைவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுக்கு கிடைத்த மதிப்பெண்கள் விவரமும் வெளியிடப்பட்டுள்ளது. உலகின் நம்பிக்கையான தலைவர்களில் இந்தியப் பிரதமர் மோடிக்கு முதல் இடம் கிடைத்துள்ளது. அவர் 100 மதிப்பெண்களுக்கு 75 மதிப்பெண்களை பெற்று அசைக்க முடியாத முதல் இடத்தில் இருக்கிறார்.

2ஆவது இடத்தில் தென் கொரிய ஜனாதிபதி லி ஜோ மியுங் உள்ளார். அவருக்கு 59 மதிப்பெண்கள் கிடைத்துள்ளன. ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி ஜாவிஸ் 3ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இந்த நம்பிக்கை பட்டியலில் 8ஆவது இடத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் (44 மதிப்பெண்கள்) தள்ளப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி



கயானா, ஜூலை 28

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.


அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 3 ஆட்டங்களிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது ரி - 20 போட்டி நேற்று நடைபெற்றது.

முதலில் துடுப்பாட்டம் செய்த மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 205 ஓட்டங்கள் குவித்தது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக ரூதர்போட் 31 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் அடம் ஸம்பா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 206 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த அவுஸ்திரேலியா 19.2 ஓவரில் 7 விக்கெட்கள் இழந்து 206 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா தரப்பில் கேமரூன் கிரீன் (55 ), ஜோஷ் இங்கிலிஸ் (51) அரைச்சதம் அடித்து அசத்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 4-0 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி இன்று நடைபெறுகிறது. (எ)

## வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் ரைபகினா அதிர்ச்சி தோல்வி



வாஷிங்டன், ஜூலை 28

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரின் அரையிறுதியில் ரைபகினா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சியில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா (கஜகஸ்தான்), கனடாவின் லெய்லா பெர்னாண்டஸ் உடன் மோதினார்.

இதில், எளிதில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரைபகினா யாரும் எதிர்பார்க்கா வண்ணம் 7-6 (7-2), 6-7 (3-7), 6-7 (3-7) என்ற செற் கணக்கில் லெய்லா பெர்னாண்டஸிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறினார். (எ)

## இந்தியாவை வீழ்த்தி ஆஸி. அணி வெற்றி

லீட்ஸ், ஜூலை 28

லெஜண்ட்ஸ் லீக் தொடரில் இந்தியாவை வீழ்த்தி அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.2ஆவது உலக சம்பியன்ஸ் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் லீட்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலியா மோதின.

முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 203 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 204 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை.

இருப்பினும் காலம் பெர்குசன் அதிரடியாக விளையாடி அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்தார்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 207 ஓட்டங்கள் அடித்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

## வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ்: இறுதிப்போட்டியில் அன்னா



வாஷிங்டன், ஜூலை 28

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் அன்னா கலின்ஸ்கயா இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சியில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனைகளான ரஷ்யாவின் அன்னா கலின்ஸ்கயா - பிரிட்டனின் ஏம்மா ராடுகானு ஆகியோர் மோதினர்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய அன்னா கலின்ஸ்கயா 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் ஏம்மா ராடுகானுவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் அன்னா கலின்ஸ்கயா, கனடாவின் லெய்லா பெர்னாண்டஸ் உடன் மோதுகிறார். (எ)

## வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ்: அலெக்ஸ் டி மினார் வெற்றி



வாஷிங்டன், ஜூலை 28

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் அவுஸ்திரேலியாவின்அலெக்ஸ் டி மினார் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சியில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான அலெக்ஸ் டி மினார், பிரான்வின் கோரெண்டின் மவுடெட் உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெக்ஸ் டி மினார் 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் கோரெண்டின் மவுடெட்டை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: வலுவான நிலையில் இங்கிலாந்து



லண்டன், ஜூலை 28

இந்தியாவுக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

இதேவேளை, 4 ஆம் நாள் முடிவில் இந்தியா 2 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 4ஆவது போட்டி மான்செஸ்டரில் நடைபெற்று வருகிறது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 61 ஓட்டங்கள் அடிக்க, இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 157.1 ஓவர்களில் 669 ஓட்டங்கள் குவித்த நிலையில் சகல விக்கெட்களையும் இழந்தது. இது இந்திய அணியை விட 311 ஓட்டங்கள் அதிகமாகும். இங்கிலாந்து தரப்பில் ஜோ ரூட் 150 ஓட்டங்களும் பென் ஸ்டோக்ஸ் 141 ஓட்டங்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் ஜடேஜா 4 விக்கெட்களும் பும்ரா மற்றும் வாஷிங்டன் சுந்தர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பின்னர் 311 ஓட்டங்கள் பின்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இங்கிலாந்து அணியை விட 137 ஓட்டங்கள் இந்திய அணி பின் தங்கியுள்ளது. கைவசம் இன்னும் 8 விக்கெட்கள் மட்டுமே உள்ள நிலையில், இந்திய அணி இந்த டெஸ்ட் போட்டியை சமநிலையில் முடிக்க போராட வேண்டியிருக்கும். இதேவேளையில், இங்கிலாந்து அணியின் கை இந்த டெஸ்ட்டில் ஓங்கியுள்ளது. (எ)

## மகளிர் ஒருநாள் கிரிக்கெட்: சிம்பாவே அணியை வீழ்த்தி அயர்லாந்து அணி வெற்றி



பெல்பாஸ்ட், ஜூலை 28

97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வீழ்த்தி அயர்லாந்து அணி வெற்றி பெற்றது.

சிம்பாவே மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 2 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 3-0 என்ற கணக்கில் அயர்லாந்து கைப்பற்றியது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த அயர்லாந்து 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 288 ஓட்டங்கள் குவித்தது. அயர்லாந்து தரப்பில் அதிகபட்சமாக சாரா போர்ப்ஸ் 54 ஓட்டங்கள் எடுத்தார். சிம்பாவே தரப்பில் கெலிஸ் நத்லோவு 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 289 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய சிம்பாவே அணி 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 191 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் மூலம் 97ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அபார வெற்றி பெற்றது.

சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக சிப்போ முகேரி-டிரிபனோ 48 ஓட்டங்கள் எடுத்தார். இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று நடைபெறவுள்ளது. (எ)

## மாகாண சபை...

40 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப் படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை இன்றைய அரசியல் சவால்களை எதிர் கொள்கிறதா என்பதை நாம் ஆராய வேண்டும். மேலும், மாகாண சபை முறைமையின்றி கடந்த பல வருடங்களாக நாடு இயங்கி இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந் தும் நடத்தப்படாமல் தாமதமடைந்து வருகின்ற சூழலில் அது தொடர்பில் தினேஷ் குணவர்தனவின் நிலைப் பாட்டை வினவியபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த 2014ஆம் ஆண்டு இறுதியாக ஊவா மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டதன் பின்னர் இன்னும் மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை. கிட்டத்தட்ட 06, 07 வருடங்களாக தேர்தல்கள் நடத்தப் படாமல் தாமதமாகி வருகிறது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத் துவதில் தேர்தல் முறை தொடர்பான சட்ட சிக்கல் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்யவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் என்பன மாகாண சபைகள் உடனடியாக நடத் தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருக்கிறது.

இந்நிலையிலேயே தினேஷ் குணவர்த் தன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், மாகாண சபை முறைமை கடந்த காலங்களில் பயனற்றதாகவே இருந்துள்ளது. மாகாண சபைகள் இன்றி நாடு பல வருடங்கள் பயணித்திருக்கிறது. எனவே, இதற்கு பின்னரும் இந்த மாகாண சபை முறை நாட்டுக்குத் தேவையா என்று சிந்திக்கவேண்டும். மாகாண சபையூடாக மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. மாறாக இதற்கு பாரியளவு நிதி செலவிடப்படுகிறது. எனவே, மாகாண சபை நாட் டுக்கு தேவையா என்பது தொடர்பில் மீள சிந்திக்கவேண்டிய காலம் மீள உருவாகியிருக்கிறது. இது தொடர்பில் சகல தரப்பினரும் கலந்துரையாட வேண் டும். தமது யோசனைகளை முன்வைப் பது அவசியம். மாகாண சபை முறைமை தொடர்பாக முழுமையான மீள் சிந்தனை அவசியமாகிறது. மாகாண சபை முறை மையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது அதனை முழுமையாக மாற்றிய மைப்பதா? அல்லது அதனை இல்லாமல் செய்வதா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும்.

இன்றைய காலகட்ட சவால்களுக்கு இந்த மாகாண சபை முறைமை பதில் அளிக்கிறதா என்பது குறித்து சிந்திக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்குகின்றன. நாட்டின் சகல பகுதிகளுக்குமான அபிவிருத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெ டுக்கலாம். எனவே, இடையில் மாகாண சபை அவசியமா? என்ற கேள்வி எழுகி றது. இலங்கையில் மாகாண சபையா னது அரசியல்வாதிகளுக்கு பாராளுமன் றம் செல்வதற்கான ஓர் இடைக்காலமா கவே இருக்கிறது.

கல்வி, சுகாதாரம், முதலீடுகள், விளை யாட்டு உள்ளிட்ட விடயங்களில் மாகாண மட்டத்தில் பரந்துபட்ட வகையில் செயல்பட ஒரு பொறிமுறை அவசியம். அதனை பாராளுமன்ற உறுப்பினர்களே செய்யலாம். தற்போதுகூட மாவட்ட அபிவிருத்தி சபைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களே தலைமை தாங்குகின் றனர். எனவே இதற்கு மாகாண சபை முறைமை தேவையற்றது. இது தொடர்பில் பேச்சு நடத்த முடியும். ஆனால், கடந்த காலங்களில் இதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. வடக்கில் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இருந்த காலத்தில்கூட அங்கு மிகப் பெரிய மாற்றங்களோ அபிவிருத்திகளோ இடம்பெறவில்லை - என்றார். (அ)

## ஜனாதிபதியின்...

இப்போதெல்லாம், அவர்கள் கொஞ்சம் சங்கடமாக உணர ஆரம்பித்து விட்டார்கள்.

சமீபத்தில் வவுனியாவில், எனது அமைச்சு செயலாளர் எப்படி இப்படியே தொடர முடியும் என்று கேட்டார். அவர்களில் எட்டு பேர் ஒரு வானில் பயணம் செய்தனர் என்று அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதியின் வாகன அணிவகுப்பை காட்டும் சமூக ஊடகப் பதிவுகளைக் குறிப்பிட்ட அமைச்சர், "ஜனாதிபதி பயணம் செய்யும்போது, அவருடன் செல்லவேண்டிய ஒரு குழு உள்ளது. இதைத் தவிர்க்க முடியாது" என்றார்.

தற்போதைய பாதுகாப்பு அமைப்பை கடந்த காலங்களுடன் ஒப்பிடுவது நியாயமற்றது என்று அவர் தொடர்ந்து கூறினார்.

"இதை விமர்சிப்பது முட்டாள்தனம் என்று நான் நினைக்கிறேன். எனது தனிப்பட்ட பார்வையில், ஜனாதிபதிக்கு மிகப் பெரிய பாதுகாப்பு விவரங்கள் இருக்க வேண்டும். யார் விமர்சித்தாலும் பரவாயில்லை. பாரிய பாதுகாப்பு இருக்கவேண்டும். தோழர் அநுரவுக்கு அது பிடிக்கவில்லை. ஆனால், தேவைப்பட்டால் ஒரு ஹெலிகொப்டர் கூட வழங்கப்படவேண்டும் என்று நான் நம்புகிறேன்," என்று அவர் மேலும் கூறினார். (அ)

## ஒற்றுமையை...

விடயத்துக்கான நடவடிக்கைகளை முன்னின்று எடுத்திருக்கவேண்டும்.

துரதிருஷ்டவசமாக அந்த நடவடிக்கையில் அத்தரப்பினர் ஈடுபடவில்லை. எனினும், கடந்த காலங்களில் நாம் ஒன்றிணைந்து பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பியுள்ளோம்.

ஆகவே அவர்களும் இந்தச் செயற்பாட்டில் நிச்சயமாக பங்கேற்கவேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும். ஆனால், அவர்கள் கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை. சிலவேளைகளில் ஏனைய பல்வேறுபட்ட தரப்பினரும் இருந்தமையால் வீணான முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற வகையில் அந்தச் சந்திப்பை அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

எனினும் , நாம் வரைவை தயாரிக்கும் பணிகளை இந்த வாரத்துக்குள் பூர்த்தி செய்யவுள்ளதோடு, அதனை தமிழரசுக் கட்சிக்கும் அனுப்பி வைக்கவுள்ளோம்.

அவர்கள் வரைவின் உள்ளடக்கங்களை ஏற்றுக்கொண்டோ அல்லது நியாயமான முறையில் சில மாற்றங்களை மேற்கொள்ளவேண்டுமென்று கருதினாலோ அதுபற்றி கலந்துரையாடலாம். அதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

தமிழ் அரசுக்கட்சி வரைவை பார்த்த பின்னர் கையொப்பமிடுவதற்கு தயாரில்லை என்றால் தமக்கு ஆணை வழங்கிய தரப்பினருக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டியேற்படும். அது அவர்களுடைய விடயமாகும்.

எம்மைப்பொறுத்தவரை தமிழர் தேசத்தில் உள்ள ஒவ்வொருவரையும் இணைத்துக்கொண்டு இச்செயற்பாட்டில் முன்செல்வதற்கே முனைகின்றோம்-என்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ந. சிறிகாந்தா தலைமையில் நடைபெற்ற இந்த பகிரங்க அரசியல் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சட்டத்தரணி ப. குகனேஸ்வரன், சமூக அரசியல் செயற்பாட்டாளர் சி. சிவமோகன் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## அடுத்த...

ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் கலந்துரையாடல்களில் முன்னேற்றம் ஏற்படும் என இலங்கை பிரதிநிதிகள் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வரிக்குறைப்பு தொடர்பாக ஜனாதி பதிக்கும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் தூதுவருக்கும் இடையே நிகழ்நிலை ஊடாக நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை யிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 வீத தீர்வை வரியை அமெரிக்கா அறிவித்தது.

இந்த வரி விகிதத்தை மேலும் குறைக்க அரசாங்கம், அமெரிக்காவுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவாக்க...

வலியுறுத்தினார்.

இலங்கையில் இடம்பெறுகின்ற சிறுவர்களுக்கெதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு தேவையான அழுத்தங்களை வழங்கும் நோக்கில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு மாநாடு நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டவாக்கக் கட்டமைப்புக்களை பலப்படுத்தி சிறுவர்களுடன் கடமையாற்றும் நிறுவனங்கள் மற்றும் தொழில்வல்லுநர்களின் ஆற்றலை மேம்படுத்தி சிறுவர் நேய நீதித்துறை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு தமது ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார்.

அத்துடன், சிறுவர்களுக்கான நீதியில் நேர்மையும் சமத்துவமும் பிரதிபலிக்க வேண்டும், அவர்களின் வயது மற்றும் பால்நிலைத் தேவைகளை கருத்திற் கொண்டு அவர்களைப் பராமரிப்ப தோடு, அவர்களின் கண்ணியமும் எதிர்கால வளர்ச்சியும் பாதுகாக்கப் படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

## தரையை ஊடு...

இந்நிலையில், அரியாலையின் குறித்த பகுதிக்குள் மட்டும் அகழ்வுகளை மேற்கொள்ளாமல், பரந்துபட்ட இடங்களிலும் மேற்கொள்ளவேண்டும் என உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் வலியுறுத்தல்கள் அதிகரித்தன.

இந்தக் கோரிக்கைகளை அடுத்து, ஜி.பி.ஆர். ஸ்கானிங் இயந்திரம் வெளி நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு, தற்போது ஆய்வுகளை ஆரம்பிக்கத் தயாராகின்றன. இலங்கையில் இதுவரை முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களில் ஏ.எம்.ஆர்.ஐ ஸ்கானர் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தரையை ஊடுருவும் ராடர் பயன்படுத் தப்படும் முதலாவது இடமாக அரியாலை புதைகுழி பதியப்படுகிறது.

இந்த ராடர் அமைப்பு, கொங்கிரீட் போன்ற தடைகளை ஊடுருவி, நிலத்துக் குக் கீழ் இருக்கும் பொருட்கள் மற்றும் உடற்கூறுகளை திரையில் காண்பிக்கக் கூடிய நவீன தொழில்நுட்பமாகும். கனடா போன்ற நாடுகளில் மனிதப் புதைகுழிகளை கண்டறியவும் இது பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அத்துடன், ஆய்வுப் பணிகளை எளி தாக்கும் வகையில் அரியாலை புதை குழிக்கு அருகிலுள்ள பகுதிகள் சுத்தம் செய்யப்படுகின்றன. இந்த ஸ்கானிங் மூலம் மேலும் பல எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்படக் கூடும் என நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்நிலையில், பாதுகாப்பு அமைச் சின் அனுமதியுடன் விரைவில் இந்த பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

# எரிபொருள் நுகர்வு 30 சதவீதம் வீழ்ச்சி

நாட்டில் எரிபொருள் நுகர்வு சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய பெற்றோல் நிலையங்களுக் கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள் ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார உற்பத்திக்கு புதுப்பிக்கத் தக்க ஆற்றலை அதிகமாகப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

## எலும்புக்கூடு...

இருந்தும் நேற்று 05 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இதேவேளை, அரியாலை மனிதப் புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரை கட்டம் கட்டமாக 31 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, நேற்றுடன் 95 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## அல்லைப்பிட்டி...

உடனடியாக ஊரவர்களை அழைத்து குறித்த முதியவரை மீட்க முயற்சித்துள் ளார். அனாலும் குறித்த முதியவர் தீயில் கருகி ஏற்கனவே இறந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கிராம சேவகர் மற்றும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு தீவகப் பகுதி மரணவிசாரணை அதிகாரி என். தியா கராசா சென்று பார்வையிட்டு, சடலம் மீட்கப்பட்டு பொலிஸாரின் ஒத்துழைப் புடன் யாழ். போதனா வைத்தியசா லைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக குறித்த முதியவர் நடக்க முடியாத நிலையில் தனது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

புகைபிடிக்கும் பழக்கம்கொண்ட குறித்த முதியவர் பாவித்த பீடியின் மூலம் அவர் உறங்கும் மெத்தையில் ஏற்பட்ட தீயின் காரணமாகவே இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந் துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (அ-05)

## முன்னாள்...

பணத்தை முறைகேடாக பயன்படுத் தியமை தொடர்பாக இந்த கைது இடம் பெறவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், குறித்த அமைச்சின் பல அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங் கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு திட்டங்களின்கீழ் அரசாங்க நிதியை முறைகேடாக பயன்ப டுத்துதல், சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட பல்வேறு வேலை ஒதுக்கீட்டிற்காக தொழிலதிபர்களி டமிருந்து சட்டவிரோதமாக பணம் பெறுதல் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சினால் பல்வேறு நிபுணர்களுக்கு வழங்கப்படும் ஒரு குறிப்பிட்ட சலு கையை வழங்க இலஞ்சம் பெறுதல் உள்ளிட்ட பல கடுமையான குற்றச் சாட்டுகளுக்கு இந்த முன்னாள் அமைச் சர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஒரே பாலினத் திருமணத்துக்கு பேராயர் மல்கம் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 28

**ஒரே பாலின திருமணம் என்பது மனித உரிமை அல்ல, அதை அனுமதிக்கக்கூடாது என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**


பேருவளை புனித அன்னாள் தேவாலயத்தில் இடம்பெற்ற வழி பாட்டில் கலந்துகொண்ட போதே பேராயர் கர்தினால் இவ்வாறு தெரிவித்தார்.

பாரம்பரிய குடும்ப அலகைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பிலும் பேராயர் கர்தினால் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

பல்வேறு பிரசாரங்கள் மற்றும் திருமணத்தின் உண்மையான அர்த் தத்தைப் புரிந்து கொள்ளாமல் தற்காலிக தீர்வுகளைத் தேடுவதால் புதிய தலைமுறை தவறாக வழிநடத் தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

ஒரே பாலின திருமணம் ஊக்கு விக்கப்படுகிறது. இது ஒரு மனித உரிமையா?, இது எப்படி நடக்கி றது?, இரண்டு ஆண்கள் எப்படி ஒரு குடும்பத்தை கட்டியெழுப்ப முடியும்? அவர்களுக்கு எப்படி குழந்தைகள் பிறக்கும்?

முன்னைய காலத்தில் பெற்றோரின் பராமரிப்பின் கீழ் அவர்களின் ஆசீர்வாதத்துடன்



இளைஞர்கள் திருமணம் செய்து கொண்டனர். இத்தகைய திரும ணங்கள் இன்றைய திருமணங்களை விடவும் மிகவும் வெற்றிகரமாக காணப்பட்டதாகவும் பேராயர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

## இனியபாரதியின் சகா கைது

கொழும்பு, ஜூலை 28

இனிய பாரதியின் சகா ஒருவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொப்பிமனாப் என்றழைக்கப்படும் திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான சி.விக்கி னேஸ்வரனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, கடந்த ஆறாம் திகதி இனிய பாரதி கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காகக் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இந்த கைதையடுத்து இனிய பாரதியின் முன்னாள் சாரதி கடந்த 9 ஆம் திகதி கல்முனை நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில், நேற்று முன் தினம் பிற்பகல் இனிய பாரதியின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டு சோதனை செய்யப்பட்டது.

அவ்வாறே தம்பிலுவில் பிரதான வீதியில் இயங்கி வந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முகாம், தம்பட்டையில் இயங்கி வந்த முகாம், திருக்கோவில் மயானம் போன்றவையும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதியின் மற்றுமொரு சகாவான திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ)

## தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட இலங்கை தமிழர்களின் திருமணம்

சென்னை, ஜூலை 28

தமிழகத்தின் மேட்டுப்பாளையம் பதிவாளர் அலுவலகத்தில், 22 இலங்கைத் தமிழர் மணமக்களின் திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன.

மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களின் திருமணங்களைப் பதிவு செய்வதற்காகச் சிறப்பு முகாம்களை ஏற்பாடு செய்யத் தமிழக அரசு அறிவுறுத்தி இருந்தது.

அதற்கமைய, மேட்டுப்பாளையம் வேடர் குடியிருப்பு மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களான, 22 மணமக்களின் திருமணங்கள் மேட்டுப்பாளையம் பதிவாளர் அலுவலகத்தில், பதிவு செய்யப்பட்டன. (அ)

## சரக்குக் கப்பல் மூழ்கிய சம்பவம் இலங்கை கடற்கரையில் தாக்கம்



கொழும்பு, ஜூலை 28


கேரள மாநிலம் கொச்சி கடற்கரையில்,சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கி இரண்டு மாதங்களுக்குப் பின்ன ரும், அதன் தாக்கம் இலங்கையின் மேற்கு கடற்கரையில் உணரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் ஏனைய கழிவுகள் இலங்கையின் கடற்கரைகளில் ஒதுக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது அந்த தெஹிவளை, வெள்ளவத்தை கடற்கரைகளிலும் காணப்படுகின்றன. எனினும், இன்னும் அவற்றை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

இந்தநிலையில், தன்னார்வலர்கள் தெஹிவளை கடற்கரையில், குறித்த கழிவுகளைச் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## அரியாலை புதைகுழியில் 46 சான்றுப்பொருட்கள் மீட்பு



கொழும்பு, ஜூலை 28

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்று முன் தினம் வரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது 46 சான்றுப்பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் முதலாம் கட்டமாக 9 நாள்கள் இடம்பெற்ற அகழ்வு மற்றும் இரண்டாம் கட்டமாக 21 நாள்கள் (நேற்று முன் தினம் வரை) இடம்பெற்ற அகழ்வில் 46 சான்றுப் பொருள்கள் அடையாளம் காணப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை சிறுவர்களின் பாடசாலைப் புத்தகப் பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை, காற்சங்கிலி, சிறு வளையல், இரும்புக் கட்டிகள், போத்தல், பாதணிகள், சிறுமிகளின் ஆடைகள், கற்கள், பிளாஸ்ரிக் மாலை உள்ளிட்ட 46 சான்றுப் பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடதக்கது. (அ)

## சுகாதார சேவையை மேம்படுத்த நடவடிக்கை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் ஆரம்ப சுகாதார சேவையானது மறுமலர்ச்சியுடன் நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சால் ஊடகங்களுக்கு ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு தற்போது வழங்கப் படும் ஆரம்ப சுகாதார சேவைகளை எதிர்காலத்தில் மிகவும் சிறந்த சேவையாக வழங்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு முழு நாட் டையும் உள்ளடக்கும் வகையில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் நிறுவப்பட உள்ள ஆரம்ப சுகாதார சமூக மையத் திட்டம் குறித்து பொது சுகாதார தாதியர் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பட்டறை நேற்று முன் தினம் இலங்கை அறக்கட்டளை கேட் போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் நடைபெற்றது இந்தப் பயிற்சிப் பட்டறை சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஆரம்ப சுகாதாரப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டது.

நாட்டின் சுமார் 10,000 மக்கள் தொகையை உள்ளடக்கிய ஒரு ஆரம்ப சுகாதார சேவை மையத்தை நிறுவுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

மேலும், முதல் கட்டமாக, அடுத்த 03 ஆண்டுகளில் நாடு முழுவதும் 2000 மையங்கள் நிறுவப்பட உள்ளன. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் அறிவுறுத்த லின்படி இந்த திட்டத்திபடி இந்த ஆண்டு 100 ஆரம்ப சுகாதார சேவை மையங்களை நிறுவ சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு திட்டமிட்டுள்ளது

மேலும் இந்த மையங்கள் 08 பணியாளர்களுடன் செயல்பட உள்ளன.

விழிப்புணர்வு பட்டறையில் பேசிய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர், தற்போது நாட்டில் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு இந்த திட்டம் ஒரு அத்தியாவசிய செயல்முறையாகும் என்று கூறினார்.

இதுவரை நாட்டில் உள்ள இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளின் மேம்பாட்டிலேயே கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், ஒரு மருத்துவமனைக்கு பல மாடி கட்டிடங்களை வழங்குவது ஆரம்ப சுகாதார சேவையின் மேம்பாட்டை விட அரசியல் ரீதியாக முக்கிய மானது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிதி சர்வதேச அமைப்புகள் மற்றும் தனியார் நன்கொடையாளர் களிடமிருந்து பெறப்படும். நாட்டுக்கு சுமார் 2000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவை என்றும், இது தொடர்பான பணிகள் அடுத்த 03 ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளப்படும் என்றும் மக்களுக்குப் பரிச்சயமான மற்றும் மக்களை ஈர்க்கும் இடங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் இரு உத்தியோகத்தர்கள் பணி நீக்கம்

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரை மாய்த்து கொண்டதாக கூறப்படும் சம்பவத்தையடுத்து, குறித்த பொலிஸ் நிலையத்தின் இரு உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தின்போது, பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்ததாக கூறப்படும், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருமே பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதல் சம்பவமொன்று தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்த 66 வயதுடைய ஒருவர் சிறைக்கூடத்தில் உயிரை மாய்த்துக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட விசாரணைகளையடுத்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org